ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 34 ]
Total No. of Questions : 34 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 4
[ Total No. of Printed Pages : 4

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 50-T (OS)**
**Code No. : 50-T (OS)**

## ಶಿಕ್ಷಣ – III
## EDUCATION – III
## ವಿಷಯಾಧಾರಿತ ಬೋಧನಾ ಪದ್ಧತಿ – II
# ವಿಜ್ಞಾನ
## CONTENT BASED METHODOLOGY OF TEACHING – II
# SCIENCE

(ತಮಿಳು ಭಾಷಾಂತರ)
( Tamil Version )

**(ಹಳೆ ಪಠ್ಯವಸ್ತು)**
**( Old Syllabus )**

ದಿನಾಂಕ : 02. 07. 2015 ]
Date : 02. 07. 2015 ]

ಸಮಯ : ಮಧ್ಯಾಹ–2.00 ರಿಂದ 5.00 ರವರೆಗೆ ]
Time : 2.00 P.M. to 5.00 P.M. ]

[ ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 100
[ Max. Marks : 100

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*
*Register Number of the Candidate*

**பகுதி – A**

I. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மூன்று பக்கத்திற்கு மிகாமல் விடையளிக்கவும். அக்கேள்விகளுள்ள பாகம் (a) மற்றும் பாகம் (b) இரண்டிற்கும் விடையளிக்கவும். ஒவ்வொரு வினாவிற்கும் பத்து மதிப்பெண்கள் வழங்கப்படும் : 4 × 10 = 40

1. a) அறிவியல் முறை (Scientific method) என்றால் என்ன ? அறிவியல் முறையின் படிநிலைகளை விரிவாக விளக்கவும்.

   b) அறிவியல் கற்பித்த னால், தொடக்கப்பள்ளி ஆசிரியரான நீங்கள், மாணவர்களிடம் வளர்க்க விரும்பும் ஐந்து மதிப்புகள் யாவை ? ஏதேனும் ஒன்றினை விளக்கவும். 5 + 5

2. a) தொடக்கநிலையில் அறிவியல் ஏன் கற்பிக்கப்பட வேண்டும் ?

   b) 'தாவரத்தின் பாகங்கள்' என்ற பாடத்திற்கான நோக்கங்கள் மற்றும் சரியான குறிப்புகளையும் எழுதவும். 5 + 5

3. a) குழந்தை மையம் (Child centered) மற்றும் ஆசிரியர் மையமுறைகளைப் (Teacher centered) பற்றி விளக்கவும்.

b) நல்ல செயல்விளக்கத்தை (Demonstration) மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தும் அளவுருகள் யாவை ? 5 + 5

4. a) திறனடிப்படைக் கற்பித்த ன் (Competency based teaching) படிநிலைகள் யாவை ? சுருக்கமாக விளக்கவும்.

b) செயல் திட்ட முறையின் (Project method) நிறைகள் யாவை ? 6 + 4

5. a) மூலவள அலகு (Resource unit) என்றால் என்ன ? மூலவள அலகின் பகுதிகள் (Segments) யாவை ?

b) நிறைவுபடுத்தும் கற்பித்தல் நிலையைச் (Supplementary teaching) சார்ந்துள்ள அம்சங்கள் யாவை ? 4 + 6

6. a) ஆண்டு வேலைத் திட்டத்தின் (Annual programme of work) கொள்கைகளை எழுதவும்.

b) அறிவியல் கற்பித்த ல் முன் தயாரிப்பு நிலைக்காக (Pre-preparatory stage), ஏதேனும் 10 பொருத்தமான செயல்பாடுகளைப் பட்டிய டவும்.

5 + 5

7. a) தேர்வு (Examination) மற்றும் மதிப்பீடு (Evaluation) வேறுபடுத்தவும்.

b) அறிவியல் கற்பித்த ல் தொடர்ச்சியான மற்றும் பொருளமைவு மதிப்பிடுத ன் (Comprehensive evaluation) முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்கவும். 5 + 5

## பகுதி – B

II. கீழ்க்கண்ட ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் ஐந்து மதிப்பெண்கள் கொடுக்கப்படும் :

7 × 5 = 35

8. சமுதாய நிலை மாற்றத்தில், அறிவிய ன் விளைவுகளை விளக்கவும்.

9. பள்ளிகளில், கல்விக்காக பரிந்துரை செய்யப்பட்ட தேசிய பாடத்திட்ட உருவரைச் சட்டம் (National Curriculum Framework for School Education), 2005 இல், அறிவியல் கற்பித்தலுக்கான நோக்கங்ளை எழுதவும்.

10. பெஞ்சமின் எஸ். புளூம் அவர்களது மூன்றன் பகுதிகளின் (Three domains) நோக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தரவும்.

11. வகுப்பறையில் அறிவியல் பரிசோதனைகள் செய்யும்போது, மனதில் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை ?

12. கீழ்க்காணும் பொருட்களைப் பயன்படுத்தி செய்த பரிசோதனையை காட்டும் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடவும்.

    i) வில் தராசு (Spring balance)

    ii) ஒரு பொருள் (An object)

    iii) நீர்

    iv) முகவை (Beaker).

13. அலகுத் திட்டத்தின் படிவத்தை (format) வரையவும்.

14. கலைத் திட்டத்தைத் (Curriculum) தயாரிக்கும்போது நாம் பின்பற்றவேண்டிய கொள்கைகள் யாவை ?

15. சிறந்த அறிவியல் ஆசிரியரின் தகுதிகளைப் பட்டிய டுக.

16. சிறப்பான வரைபடங்களைத் தயாரிக்கும் போது நீவிர் கருத வேண்டிய காரணிகள் யாவை ?

17. மதிப்பீடு என்றால் என்ன ? மதிப்பீட்டின் வகைகளைப் பற்றி சுருக்கமாக விளக்கவும்.

## பகுதி – C

III. கீழ்க்காணும் ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு அரை பக்கத்திற்கு மிகாதவாறு விடையளிக்கவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் மூன்று மதிப்பெண்கள் வழங்கப்படும் :

$5 \times 3 = 15$

18. மருத்துவத் துறையில் அறிவிய ன் பயன்பாடுகள் யாவை ?

19. கற்ற ன் குறைந்தபட்ச அளவுகளை (Minimum levels of learning) அமைக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை ?

20. அறிவியல் கிளப்பின் பயன்பாடுகளைப் பட்டிய டவும்.

21. அறிவியல் கற்பித்த ல் களப்பணியை (Field trips) நற்பயன் அளிக்கத்தக்க வகையில் எவ்வாறு ஏற்பாடு செய்வீர்கள் ?

22. அறிவியலை சிறப்பாகக் கற்பிக்க ஒளித்தட்டுகளை (Video cassettes) எவ்வகையில் பயன்படுத்துவீர்கள் ?

23. மதிப்பீட்டின் மூன்று அம்சங்களை வரைபடத்தின் மூலம் குறிப்பிடவும்.

24. உங்கள் விருப்பத் தேர்வின்பிடி ஏதேனும் மூன்று பன்முகத் தெரிவு வினாக்களை (Multiple choice question) எழுதவும்.

## பகுதி – D

IV. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். ஒவ்வோர் வினாவிற்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும்.

10 × 1 = 10

25. அறிவியல் என்பதன் பொருள் என்ன ?

26. பிரெய்ல் வரிவடிவை யார் பயன்படுத்துவர் ?

27. அருங்காட்சியகத்தை மேம்படுத்துவதற்கு நீங்கள் பயன்படுத்தும் மூன்று படிநிலைகள் யாவை ?

28. வினாடி வினாவின் ஏதேனும் இரண்டு நிறைகளை எழுதவும்.

29. மருத்துவமனையின் கழிப்புப் பொருட்களைப் பயன்படுத்தி, தயாரிக்கத்தக்க ஒரு நவீன ஆய்வுக் கருவியைக் குறிப்பிடவும்.

30. சூரியக் குடும்பத்தின் எளிய மாதிரியை எவ்வாறு தயாரிக்கலாம் ?

31. செயல் வடிவமைப்புப் படிவம் (Blueprint) என்றால் என்ன ?

32. சாதனைத் தேர்வின் (Achievement test) இரண்டு வகைகளை எழுதவும்.

33. குறையறி சோதனையின் (Diagnostic test) இரண்டு பயன்பாடுகள் யாவை ?

34. பொருளமைவுத் தேர்வின் (Comprehensive Evaluation) ஏதேனும் ஒரு பயனைக் குறிப்பிடவும்.